**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**ஜீலை 2020 பரீட்சை – மட்டம் I**

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**
**(103)**

**(103) பொருளியல்**
**(ECN)**

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியாளர்களர் கழகம்
இல, 640, வென். முறுத்தெட்டுவென ஆனந்த நகிமி மாவத்தை,
நாரேஹன்பிட்டி, கொழும்பு - 05
தொ.பே - 011 2 559 669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

**இலங்கை கணக்கீட்டு தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

**மட்டம் I பரீட்சை – ஜீலை 2020**

# (103) பொருளியல்

**பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

---

**இருபது (20) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 25 புள்ளிகள்)

**பகுதி - A**

---

## *வினா 01 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள் :*

1.1 (4)
1.2 (3)
1.3 (3)
1.4 (2)
1.5 (3)
1.6 (2)
1.7 (1)
1.8 (4)
1.9 (2)
1.10 (1)
1.11 சராசரி கிரயம்
1.12 உயர்வானது
1.13 தவறு
1.14 சரி
1.15 தவறு
1.16 **அடிப்படை பொருளாதார பிரச்சனைகள்**
ஏதனை உற்பத்தி செய்வது ? மற்றும் எந்தளவு உற்பத்தி செய்வது ?
எவ்வாறு உற்பத்தி செய்வது ?
யாருக்காக உற்பத்தி செய்வது?

1.17 **குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி** என்பது குறுங்காலத்தில் உற்பத்தி நடைமுறையின் போது மாறும் காரணிகளை அதிகரிக்கும் போது குறிப்பிட்ட உற்பத்தி மட்டத்தின் பின்பு எல்லை உற்பத்தியானது குறைவடைந்து செல்வதனை குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி என அழைக்கப்படுகின்றது.
அதாவது ஒரு காரணி நிலையாக இருக்க மற்றைய மாறும் காரணிகள் அதிகரித்து செல்லுகையில் ஆரம்பத்தில் எல்லை உற்பத்தி அதிகரித்தும் மற்றும் குறித்த ஒரு புள்ளிக்கு பின்பு எல்லை உற்பத்தி மற்றும் சராசரி உற்பத்தி குறைவடைந்து செல்ல ஆரம்பிக்கும். இதனால் எல்லை வருமானம் மற்றும் சராசரி செலவு என்பன வீழ்ச்சியினை தழுவும். குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியானது ஒரு உற்பத்தி நடைமுறையில் ஏனைய காரணிகள் மாறாதிருக்கும் போது யாதேனும் காரணி மாற்றமடைவதால் , அவ் மாற்றமானது மொத்த உற்பத்தி வெளியீட்டில் வீழ்ச்சியினை ஏற்படுத்தும்.

1.18 **தனியுரிமையின் பண்புகள்.**
1. குறித்த தொழிலில் ஓரே நிறுவனம் மட்டும் காணப்படும். அதனால் போட்டி காணப்படமாட்டாது.

2. பொருள் சிறப்பு தன்மை வாய்ந்ததாக காணப்படும். பொருளுக்க பிரதியீடுகள் காணப்படமாட்டாது.

3. சந்தையில் ஒரு உற்பத்தியாளன் மட்டுமே காணப்படுவான்

4. உற்பத்தியாளனே சந்தையில் விலையினை தீர்மானிப்பவனாக காணப்படுவர்

5. பிரவேச தடை காணப்படுதல்

6. விலை பாகுபாட்டினை காணலாம்.

7. உச்ச மட்ட இலாபம் காணப்படுதல்

8. சந்தை தகவல்கள் பூரணமற்றதாக காணப்படுதலும் செலவுகளின்றி தகவல்களை பெறமுடியாதிருத்தலும்.

1.19 **தேசிய வருமானக்கணக்கின் வரையறைகள்**

- முறைசாரா பொருளாதாரத்தில் நடைபெறும் உற்பத்தி நடவடிக்கைகளை உள்ளடக்காமை
- தேசிய பொருளாதாரத்தில் சார்பு பொருளாதார நடவடிக்கைகளை உள்ளடக்காமை
- தேசிய உற்பத்தியில் இல்லத்தரசிகள் வழங்கும் சேவைகளை உள்ளடக்காமை
- தேசிய உற்பத்தி கணக்கீடுகளில் பொது கடன்களுக் செலுத்தப்படும் வட்டியை உள்ளடக்காமை
- உற்பத்தி நடவடிக்கைகள் காரணமாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதத்தை கருத்திற்கொள்ளாமை.
- பொது சேவைகளின் உற்பத்தி திறன் மாற்றங்களை கருத்திற்கொள்ளாமை..
- பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு செலவீனங்களை உற்பத்தி நடவடிக்கைகளின் கீழ் சேர்த்தல்.

- தேசிய உற்பத்தியில் நீண்ட ஆயட்காலம் கொண்ட சில நுகர்வோர் பொருட்களை உள்ளடக்காது அவற்றை
முதலீடுகளாக வகைப்படுத்தல்

1.20. **பேரீன பொருளாதார நோக்கங்கள்**

- விலை உறுதிப்பாடு
- நிறைதொழில் மட்டம்
- சென்மதி நிலுவை சமநிலை
- நியாயமான வருமான பங்கீடு
- நிலைத்து நிற்கும் பொருளாதார அபிவிருத்தி
- பொருளாதார வளர்ச்சி

**(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)**

***(மொத்தம் 40 புள்ளிகள்)***

***பகுதி A முடிவு***

**நான்கு (04) கட்டாய வினாக்கள்**
**(மொத்தம் 50 புள்ளிகள்)**

## *வினா 02 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:*

**அத்தியாயம் 01 – வணிக சூழல் தொடர்பான பொருளாதார கருத்துக்கள் மற்றும் அமைப்புக்கள்**
a ) **பொருளாதார பண்டம் மற்றும் பொருளாதாரமல்லாத பண்டம்**
**பொருளாதார பண்டம்** - எந்த ஒரு பொருள் அல்லது சேவையானது அதன் உற்பத்தியில் அருமைபாட்டினையும்
நுகர்விலில் அமையச்செலவினையும் கொண்டிருக்குமாயின் அவை பொருளாதார பண்டம் எனப்படுகின்றது.

உதாரணம் :- உணவு , உடை ,வாகனம் மற்றும் கல்விச் சேவைகள்

**பொருளாதாரமல்லாத பண்டம்** - பொருட்கள் வரையறையின்றி நுகரகூடியளவிலும் மற்றும் பூச்சிய விலையில்
எல்லையற்ற நிரம்பலை கொண்டதுமான பண்டங்கள் பொருளாதாரமல்லா பண்டங்களாகும்.

உதாரணம் :- வளிமண்டலம் , மழைநீர் , கடல்நீர் சூரிய ஒளி மற்றும் இயற்கை வளங்கள்.

**(03 புள்ளிகள்)**

**b) திட்டமிட்ட பொருளாதாரத்தின் பண்புகள்.**

- அடிப்படை பொருளாதார பிரச்சனையாவும் மத்திய திட்டமிடல் குழுவினால் தீர்த்துவைக்கப்படுகின்றது
- சொத்துரிமை அரசினை சார்ந்தது அதாவது உற்பத்தியின் அதிகாரம் அரசினையே சார்ந்தது.
- உழைப்பு தவிர்ந்த ஏனைய உற்பத்தி வளங்களின் உரிமை அரசுக்குரியது
- முயற்சியாண்மை மத்திய திட்டமிடல் குழுவை சாரந்தது
- நுகர்வோன் இறையாண்மைக்கு இடமில்லை
- பொருளாதார நடவடிக்கைகள் யாவும் சமூகநலனின் அடிப்படையில் அல்லது பொது நலனில் அடிப்படையாக கொண்டு செயற்படும்
- வருமான பங்கீடு சமமாக காணப்படுதல்
- தெரிவு சுதந்திரம் அற்றது.

**(04 புள்ளிகள்)**

**C) அமையச்செலவு பற்றிய எண்ணக்கரு**
பொருளாதார ரீதியாக முடிவுகளை எடுக்கும் போது அமையச்செலவு ஒரு முக்கியமான எண்ணக்கருவாகும். பல்வேறு மாற்றுத் தெரிவுகள் உள்ள நிலையில் ஒரு அதிசிறந்த தெரிவினை ஆமற்கொள்ளும் போது அதற்காக இழக்கப்படுகின்ற அடுத்த சிறந்த மாற்றுத் தெரிவின் பெறுமதி அமையச்செலவாகும். இங்கு மாற்றுத்தெரிவுகளின் ஒரு தெரிவினை மேற்கொள்ளும் போது இழக்கப்படுகின்ற அடுத்த ஒரு சிறந்த மாற்றுத் தெரிவின் மெய்பெறுமதியை குறிக்கும். ஆனால் எல்லா மாற்றுத் தெரிவுகளுக்குமான மெய்பெறுமதி இல்லை.

உதாரணம் : நிறுவன உரிமையாளர் தொழிளாலர் , மூலதனம் , இதர சொத்துக்களை பயன்படுத்தி நிறுவனம் ஒன்றினை கொண்டு நடாத்தும் போது அவர் அவ் வியாபாரத்தினை நடத்துவதன் மூலம் ஈட்டி கொள்கின்ற வருமானம். அதற்கு முதலீடு செய்தவற்றை வேறு ஏதாவது ஒரு தொழில்முறையில் பயன்படுத்தியிருந்தால் ஈட்டிகொள்ளப்படும் வருமானம் ஆனது வியாபாரத்திற்கான வருமானத்தின் அமையச்செலவு ஆகும்.

**(03 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 03 ந்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

**அத்தியாயம் 02 – கேள்வி , நிரம்பல், சந்தை சமநிலை, மற்றும் அரசு தலையிடுதல்**

a)

Qd = 180 - 4p
Qs = -20 + 6p

**சந்தை சமநிலையில் Qd=Qs**

180- 4p = -20 + 6p
200 = 10p
200/10= p
**20 = விலை**

**சந்தை சமநிலை விலை – ரூபா. 20/-**


**விலை=20 கேள்வி தொகை சமன்பாட்டில் பிரதீடுசெய்தல் ( Qd equation)**

Qd = 180 - 4p
Qd = 180 - (4 x 20)
Qd = 180 - 80
**Qd = 100**

**சந்தை சமநிலையில் கேள்வித்தொகை – 100 அலகுகள்**

**(03 புள்ளிகள்)**

**(ii)**




Price – விலை
Consumer Surplus –நுகர்வோன் மிகை
Quantity - தொகை

**நுகர்வோன் மிகை= (உச்ச விலை – சந்தை சமநிலை விலை) x தொகை / 2**

= (45-20) x 100 / 2

= ரூபா.1,250/-

**(02 புள்ளிகள்)**

**b)**
**விலைசார் கேள்வி நெகிழ்ச்சி தீர்மானிக்கும் காரணிகள்**

- சந்தையில் நெருங்கிய பதிலீட்டு பொருள்களின் எண்ணிக்கை மற்றும் ஒப்பீட்டு ரீதியில் கூடியளவு பிரதீயீட்டு பொருட்களின் எண்ணிக்கை.
- வருமானத்தில் செலவின் பங்கீட்டு விகிதாசாரம்
- பண்டத்தின் மாற்றுபயன்பாட்டுத்தன்மை
- பண்டத்தின் தன்மை
- குறித்த பண்டமானது அத்தியாவசிய பண்டமா ? அல்லது சொகுசுவகை பண்டமா? என்பதனை பொறுத்தது.
- பண்டத்தின் விலைமாற்றம் செய்வதற்காக எடுத்துக்கொள்ளப்படும் காலம்
- குறித்த பண்டத்தினால் உருவாக்கப்படும் பொருட்களின் எண்ணிக்கை.

**(02 புள்ளிகள்)**

**c) சந்தை பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையிடும் வழிகள்**

**அரசாங்கம் சந்தையில் தலையிடும் வழிமுறைகள்**

1. **வரி விதித்தல்**

சுதந்திரமான சந்தை செயன்முறைக்கு அரசாங்கம் தலையீடு செய்யும் இலகுவான முறையானது உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வாளரிடமிருந்து வரி அறவிடுவதாகும். அதாவது பண்டத்தின் மீது நுகரப்படும் பொருளுக்கு அலகு வரி அல்லது சதவீத வரி விதித்தல்.

2. **மானியம் வழங்கல்**

உற்பத்தியாளன் மற்றும் நுகரவோனுக்கு அரசாங்கம் மானியம் வழங்குதல். அரசாங்கம் சந்தையில் தலையிடும் மற்றுமொறு வழிமுறையாகும். இங்கு உற்பத்தியானுக்கு மானியம் வழங்குவதன் மூலம் பண்டத்தின் உற்பத்தியினை அதிகரிக்க முடிவதோடு உற்பத்திச் செலவினை குறைக்க முடியும்.

3. **விலைகட்டுப்பாட்டினை பேணுதல்**

பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை தளம்பல்களை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச விலையினை நிர்ணயிக்கும். நுகர்வோரை பாதுகாக்க அதிகபட்ச விலையினையும் உற்பத்தியாளரை பாதுகாக்க குறைந்த பட்ச விலையினையும் நிர்ணயிக்கும்.

4. **அரசாங்க நிறுவனங்கள்**

அரசாங்கத்தின் சார்பாக வணிக நிறுவனங்களை மற்றும் வணிக நடவடிக்கைகளை மேறகொள்ள அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட ஒரு சட்ட நிறுவனம் ஆகும். மோசமான சந்தை நிலமைகளை தவிர்பதற்கு அரசாங்கம் இவ் நிறுவனங்களை உருவாக்குகின்றது.

5. **பொது பொருட்களை வழங்குதல்**

சந்தையில் சில பொருட்கள் சேவைகளின் அதிகரிப்பு அல்லது பற்றாக்குறை ஏற்படும் போது சந்தையில் பாதாகமான நிலைமை ஏற்படுவதனை தவிர்பதற்காக அரசாங்கம் சந்தையில் தலையீடு செய்து அவ்பொருட்களை வழங்குவதன் மூலம் சந்தையில் ஏற்படும் பாதக நிகழ்வுகளை அகற்றுகின்றது.

**(03 புள்ளிகள்)**
**(மொத்தம் 10 புள்ளிகள்)**

## வினா 04 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**அத்தியாயம் 05 – நிதியியல் முறைமை, பணம் மற்றும் பொதுவிலைமட்டம்**

**a)**

**i) பணத்தின் குணவியல்புகள்**

- **பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது** - எந்தவொரு வரையறையும் இன்றி எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக காணப்படல்
- **பெறுமதியின் நிலைத்த தன்மை** - ஓரே பெறுமதியை கொண்ட எல்லா நாணயங்களும் ஓரே தன்மையை கொண்டிருத்தல்
- **இடம்பெயரக்கூடியது** - இலகுவில் எடுத்துச்செல்லக்கூடியதாக இருத்தல்
- **நீண்டகால பாவனை தன்மையுடையது** – பணமானது அதன் மதிப்பினை இழக்காமல் நீண்டகாலம் நிலைத்திருக்ககூடியது
- **வகுக்கத்தக்க தன்மை** – சிறு சிறு அலகுகளாக பிரித்து தேவைக்கு ஏற்ப கொள்வனவு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய தன்மையுடையது.
- **சீரான தன்மை** – பணம் ஓரே மாதிரியாக இருக்க வேண்டும் மற்றும் அதன் அலகுகள் ஓரே மாதிரியாக இருக்க வேண்டும்
- **அடையாளம் காணும் வசதி**- பணத்தினை எல்லோராலும் இலவில் அடையாளம் காணக்கூடியதாக காணப்படல்.
- **வரையறுக்கப்பட்ட நிரம்பல் / அருமை/ பற்றாக்குறையாக காணப்படல்** - ஒரு அரசு சமூகத்தில் பணத்தின் வெளியீடு செய்யும் அளவினை வரையறுத்து காணப்படும்.
- **அங்கீகாரம்**- சட்டரீதியாக அரச அங்கிகாரம் பெற்றதாக காணப்படும்.
- உள்ளார்ந்த பெறுமதி முகப்பெறுமதியை விட அதிகமாக இருக்காது.
- போலிகள் இல்லாதிருத்தல் அதாவது கள்ளநோட்டு புழக்கம் கடினம்.

**(02 புள்ளிகள்)**

**ii) இலத்திரனியல் பணத்தினை பயன்படுத்துவதற்கான காரணங்கள்**

- எளிதான மற்றும் விரைவான தீர்ப்பனவு முறைமை
- வாடிக்கையாளர்க்கு இலகுவான முறைமை
- சர்வதேச கொடுப்பனவுகள் செலுத்தப்படலாம்
- நாணயத்தை விட பாதுகாப்பானது
- வங்கிகளின் அக இணையத்துடன் இணைக்கப்படலாம்
- வணிக நிறுவனங்களிடையேயான போட்டி காணப்படும்
- ஒவ்வொரு நடவடிக்கையும் பதிவுசெய்யப்பட்டிருக்கும்
- நிதியியல் துறையின் முன்னேற்ற தொழிற்நுட்பம்

**(02 புள்ளிகள்)**

**b) மத்திய வங்கியின் தொழிற்பாடுகள்**

முக்கிய தொழிற்பாடுகள்

1. நாணயக்கொள்கை
2. நிதியமைப்பு ஸ்திரதன்மை

ஏனைய தொழிற்பாடுகள்

1. நாணய வழங்கல் முகாமை
2. ஊழியர் சேமபாலநிதிய முகாமை
3. பொது படுகடன் முகாமை
4. நிதியியல் நுண்ணறிவு
5. உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஓதுக்க முகாமை
6. அந்நிய செலவாணி கொள்கை முகாமை

7. நுண்நிதி மற்றும் பிராந்திய அபிவிருந்தி
8. கடன் வழங்குபவர் மற்றும் இறுதி தீர்வு

**(02 புள்ளிகள்)**

**c) பணத்தின் கேள்விக்கான நோக்கங்கள்**

1. **பரிமாற்ற நோக்க கேள்வி**
மக்கள் தமது நாளாந்த பொருட்கள் சேவைகளை கொள்வனவு செய்யும் நோக்குடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு கொடுக்கல் வாங்கல் நோக்க கேள்வி யாகும். இது திட்டமிடப்பட்ட செலவுகளுக்காக ஏற்படுத்தப்படும் கேள்வியாகும்.
நபர்களின் வருமானகிடைப்பனவுகளும் செலவீட்டு நடவடிக்கைகளும் ஒன்றுக்கொன்று பொருந்தாத காரணத்தினால் பரிமாற்ற நோக்கங்களுக்காக பணகையிறுப்புக்களை தம்மிடம் வைத்திருப்பதற்கு மக்கள் விரும்புகின்றனர்
அத்துடன் வருமானம் பெறப்படும் காலப்பகுதிக்கும் செலவீடு மேற்கொள்ளப்படும் காலப்பகுதியில் செய்யப்பட வேண்டிய கொடுக்கல் வாங்கல்களுக்காக மக்கள் தம்வசம் வைத்திருக்கும் பணக்கையிறுப்புகளின் அளவை பரிமாற்ற நோக்கத்திற்கான பணக்கேள்வி எனப்படும்


**2.முன்னேச்சரிக்கை நோக்கம்**
மக்கள் எதிர்காலத்தில் எதிர்பாராமல் ஏற்படும் செலவீனங்களுக்காக நிகழ்காலத்தில் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு பணத்தின் முன்னெச்சரிக்கை நோக்கம் ஆகும் அதாவது மருத்துவ செலவு, விபத்துக்கள் வேலைஇழப்பு, போன்ற எதிர்பாராமல் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து அல்லது வேறு செலவுகளிலிருந்து பாதுகாத்துகொள்வதற்காக பணத்திற்கு நிகழ்காலத்தில் ஏற்படுத்தும் கேள்வியாகும். இது திட்டமிடப்படாத செலவுகளுக்காக ஏற்படுத்தப்படும் கேள்வியாகும். பணத்தின் முன்னெச்சரிக்கை நோக்க கேள்வியானது பணத்தின் மெய் வருமானம் பெறும் கால இடைவெளி காணப்படுகின்றது.

**3.உத்தேச நோக்க / ஊக நோக்க பணக்கேள்வி**
பண ஆவணங்களின் / நிதி சொத்துக்களில் முதலீடுகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் வட்டி போன்ற வருமானங்களை உழைப்பதற்காக மக்கள் நிகழ்காலத்தில் வைத்திருக்க விரும்பும் பணத்தின் அளவு உத்தேச நோக்க பணக் கேள்வி ஆகும். இது பணச்சந்தையில் நிலவும் வட்டிவீமத்தினால் தீர்மானிக்கப்படும். அதாவது வட்டி வீதம் எதிர்காலத்தில் உயரும அல்லது குறையும் என எதிர்பார்த்து உத்தேச நோக்க பணக்கேள்வியினை கூட்டுவர் அல்லது குறைப்பர்.

***(06 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## வினா 05 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்:

(a)




Price - விலை
Quantity – தொகை
MC – எல்லைச்செலவு
AC – சராசரி செலவு
MR – எல்லை வருமானம்
AR– சராசரி வருமானம்

**உச்ச இலாப வெளியீட்டு புள்ளி Q1 ஆக இருக்கும் போது MC=MR**
நிறைபோட்டி சந்தையில் சந்தை சமநிலை புள்ளியில் எல்லை வருமானம் எல்லைச் செலவிற்கு சமமானதாக காணப்படும்.
இதனால் அவ்புள்ளியில் உற்பத்தி செய்யப்படும் வெளியீடுகளின் சராசரி வருமானம் மற்றும் எல்லை வருமானம் சமனாதாக காணப்படும். அத்துடன் எல்லை வருமானம் மற்றும் எல்லை செலவு சமனாதாக காணப்படும்.
ஆகையால் எல்லை வருமானம் மற்றும் எல்லை செலவு சமனாக காணப்படும் போது குறித்த பண்டத்தின் உச்ச வெளியீடுகள் பெறப்படும்.

**(04 புள்ளிகள்)**

**b)**

**Covid 19 நோய் தாக்கல் காரணமாக இலங்கை பொருளாதாரத்தில் ஏற்பட்ட பின்விளைவுகள்**

**1.நேரடி மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை திரும்ப பெற்றுக்கொண்டமை.**
இவ் நிலைமையானது சென்மதி நிலுவையின் பாதக தன்மையினை உருவாக்குகின்றமையினால், அந்த இடைவெளியினை ஈடுசெய்வதற்கு மேலதிகமாக கடன்பெறவேண்டிய நிலை உருவாகும். இதனால் நாட்டின் கடன் கொடுப்பனவு தொகை அதிகரிக்கும்.

**2.நாட்டின் சுற்றுலா துறையில் ஏற்படுட்ட வீழ்ச்சி.**
இலங்கை சுற்றுலா துறையிலிருந்து அதிக வருமானம் ஈட்டிகொள்கின்றது. Covid 19 நோய் தாக்கலால் சுற்றுலா துறை கடுமையான அளவில் பாதிப்பு அடைந்துள்ளது. இதனால் தொழிற்துறை ஊழியர்கள் வேலைவாய்ப்பினை இழந்துள்ளனர்.

**3.நாட்டின் பொருளாதார வளங்களின் பயனற்றதன்மை மற்றும் வேலையின்மை.**
Covid 19 தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் ஊரடங்க சட்ட தடை உத்தரவுகள், லொக்டவுன் நடவடிக்கைகள் இலங்கையின் தேசிய உற்பத்தி மற்றும் வருமானம் என்பனவற்றில் கணிசமானளவு வீழ்ச்சியை ஏற்பத்தியுள்ளதுடன். மேலும் நேரடியாக தொழிலாளர் வேலைவாய்ப்பினை இழக்கும் தன்மையை உருவாக்கியுள்ளது.

**4.தகவல் தொழிநுட்பத்தின் விரிவாக்கம்.**
தொழிலாளர் வீட்டிலிருந்து வேலை செய்யும் தொழில்நுட்ப முறையானது (Work From Home) தகவல் தொழில்நுட்பத்தின் உச்ச பயன்பாட்டு திறனை அதிகரித்ததுடன். இணைய பயன்பாட்டு வசதியினை அதிகரித்தது.

**5.பொருளாதாரத்தின் வணிக வருமானத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி**
லொக்டவுன் நிலையானது நாட்டின் சில நிறுவனங்கள் திவாலாகும் (Bankruptancy) நிலைமையினை எதிர்கொண்டுள்ளது. மேலும் வைரஸ் பரவுவதைத் தடுக்க ஏற்றுமதி தடைகள் விதிக்கப்பட்டதால் , அந்த நடவடிக்கைகளில் ஈடுபடும் வணிகங்கள் வருமானம் ஈட்டாததால் தங்கள் வணிகங்களை மூட வேண்டியிருக்கும்.

**6. புதிய வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன.**
Covid -19 காரணமாக மக்கள் புதிய வழிகளில் சிந்திக்கத் தொடங்கியதிலிருந்து புதிய கண்டுபிடிப்புக்கள் மற்றும் தொழில்முனைவோர் உருவாக்கப்பட்டது.

மேலும் கீழே காட்டப்பட்ட விளைவுகளும் ஏற்படும்
- பங்கு சந்தையின் சரிவு
- மக்களின் வருமான மற்றும் வாழ்க்கை தரம் வீழ்ச்சி
- நாட்டின் பொருளாதாரம் தொடர்பாக மக்களிடம் காணப்படும் நம்பிக்கையின் சரிவு
- வேறு பொருளாதார சமூக பிரச்சனைகள்

***(06 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***பகுதி B முடிவு***

# பகுதி - C

**ஒரு கட்டாய வினா**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

**அத்தியாயம் 06 – சர்வதேச வியாபாரம் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று சந்தையும்**

**a) சர்வதேச வியாபாரத்தின் அனுகூலங்கள்**

- **அதிகரித்த உற்பத்தி** – ஒப்பீட்டு நன்மைகளை கொண்ட அந்த பொருட்களின் உற்பத்தியில் நிபுணத்துவம் பெற நாடுகளுக்கு சுதந்திர வர்த்தகம் அனுமதிகின்றது. நிபுணத்துவம் மூலம் பொருளாதாரங்களின் அளவில்லா உற்பத்தி மற்றும் உற்பத்தியின் அதிகரிப்பு ஆகியவற்றை பயன்படுத்தி கொள்ள முடியும்.

- **வளங்களின் உச்ச பயன்பாடு** – சர்வதேச வியாபாரமானது நாடொன்று அதன் வளங்களை அதிகபட்ச உச்சவரம்பிற்கு பயன்படுத்துவதற்கு உதவுகின்றது. அதாவது ஒரு நாடு இறக்குமதி மற்றும் ஏற்றுமதியை நடவடிக்கையில் ஈடுபடாமல் இருந்தால் அதன் சில வளங்கள் பயன்படுத்தப்படாமல் போகலாம். சர்வதேச வியாபாரத்தில் ஈடுபடுவதால் நாட்டிலுள்ள வளங்கள் வீணாகாமல் பாவிக்கப்படுகின்றது.

- **நுகர்வோன் பெறும் நன்மைகள்** - சர்வதேச வியாபாரம் நுகர்வோனுக்கு சிறந்த பொருட்கள் மற்றும் சேவைகள் கிடைக்க வழிவகுக்கின்றதோடு தரமான பொருட்களை குறைந்த விலையில் பெறமுடியும்.

- நாடுகளுக்கிடையில் அரசியல் கலாச்சார சமூக நல்லுறவுகள் ஏற்பட முடிதல்.
- உற்பத்தி அதிகரிப்பு
- வெளிநாட்டு சந்தை தளம்பல்கள் குறைவடையும்
- மிகை உற்பத்தி பயன்பாடு
- நாட்டின் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும்
- தொழில்நுட்பம் மற்றும் தகவல் பரிமாற்றம் அதிகரிக்கும்
- அரசியல் , சமூக மற்றும் கலாச்சாரம் போன்ற பகுதிகளுடன் பொருளாதாரமற்ற நன்மைகள் சர்வதேச அமைப்புகளில் வர்த்தகம் மூலம் பெற முடியும்.
- பலதரப்பட்ட வகையான பொருட்களை கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.

**(04 புள்ளிகள்)**

b)
**நிலையான நாணயமாற்று வீதம் மற்றும் மிதக்கும் நாணயமாற்று வீதம்.**

**நிலையான நாணயமாற்று வீதம்**
நிலையான நாணயமாற்று வீதம் என்பது ஒரு அலகு வெளிநாட்டு நாணயபெறுமதிக்கு அரச நாணய அதிகாரிகளினால் நிர்ணயிக்கப்பட்ட உள்நாட்டு நாணயத்தின் பெறுமதியினை குறிக்கும். இவ் பெறுமதி உள்நாட்டின் அரச நாணய அதிகாரிகளினால் மாற்றங்கள் ஏதுமின்றி நிலையானதாக பேணப்பட்டு வருவதனை இது குறிக்கும். அதாவது நாணய அதிகாரிகளினால் உள்நாட்டு நாணய அலகொன்றின் பெறுமதியை நிர்ணயம் செய்து அப்பெறுமதியினை மீண்டும் மாற்றியமைக்கும் வரை தொடர்ச்சியாக நிலையானதாகப் பேணப்படுவதனை குறிக்கும். இங்கு நாணயப்பெறுமதி கொடுக்கப்பட்ட துல்லியமான இடைவெளி அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

**மிதக்கும் நாணயமாற்று வீதம்**
ஒரு நாட்டின் நாணயத்தின் பெறுமதியினை வெளிநாட்டுப் பெறுமதியானது அந்நாட்டு அரச அதிகாரிகளின் உத்தியோகபூர்வ தலையீடுகள் எதுவும் இன்றி சுதந்திரமான முறையில் அன்னியசெலவாணிச்சந்தையில் ,

அன்னியசெலவாணிகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் என்பனவற்றின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதனை மிதக்கும் நாணயமாற்று வீதம் எனப்படும்.

**(03 புள்ளிகள்)**

**B)**

**அத்தியாயம் 04 – தேசிய கணக்கீடு மற்றும் அரச தலையீடுகளும்**

**தேசிய கணக்கீடு செய்வதற்கான முக்கியத்துவம்**

- பொருளாதார செயல்திறனை மதிப்பிடுவதற்கு
- உலகின் பிற நாடுகளுடன் ஒப்பீடு செய்வதற்கு
- பொருளாதார வளர்ச்சிளை அளவிடுதல்
- நாட்டின் பொருளாதார கட்டமைப்பைப் புரிந்து கொள்ளல்
- தலா தேசிய வருமானத்தினை மதிப்பீடுவதற்கு.
- வளக் கட்டமைப்பு மற்றும் பயன்பாட்டிற்கான வெளிப்பாடு பற்றிய புரிதலை ஏற்படுத்தல்
- பேரின பொருளாதார மாறிகளது நடத்தையைக் கணிப்பதற்கு
- பொருளாதார மாறிகளுக்கிடையிலான செயல்பாட்டு உறவுகளை அடையாளம் காணுதல்

**(03 புள்ளிகள்)**

C)

**a) <u>மொத்த உள்நாட்டு செலவீனம் (GDE) சந்தை விலையில்</u>**

| | | |
|---|---|---|
| தனியார் நுகர்வு செலவீனம் | = | 2,000 |
| அரசாங்க நுகர்வு செலவீனம் | = | 1,500 |
| மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் | = | 1,200 |
| **மொத்த உள்நாட்டு செலவீனம் (GDE) சந்தை விலையில்** | = | **4,700** |

**b) <u>மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில்</u>**

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு செலவீனம் (GDE) சந்தை விலையில் | = | 4,700 |
| கூட்டுக: ஏற்றுமதி | = | 1,800 |
| கழிக்க : இறக்குமதி | = | (1,250) |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில்** | = | **5,250** |

**c) <u>மொத்த தேசிய வருமானம் (GNI) சந்தை விலையில்</u>**

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில் | = | 5,250 |
| வெளிநாட்டிலிருந்தான நிகர காரணி வருமானம் | = | (800) |
| **மொத்த தேசிய வருமானம் (GNI) சந்தை விலையில்** | = | **4,450** |

**(10 புள்ளிகள்)**
**(மொத்தம் 20 புள்ளிகள்)**

***பகுதி C முடிவு***

***Notice:***

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students. These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2020 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*